# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# முதல் பத்து

## ஒன்பதாம் திருமொழி - தாயே தந்தை
## திருவேங்கடம் 2

** தாயே தந்தை என்றும் * தாரமே கிளை மக்கள் என்றும் *
நோயே பட்டொழிந்தேன் * உன்னைக் காண்பதோர் ஆசையினால் **
வேயேய் பூம்பொழில் சூழ் * விரையார் திருவேங்கடவா! *
நாயேன் வந்தடைந்தேன் * நல்கி ஆள் என்னைக் கொண்டருளே 1

மானேய் கண் மடவார் * மயக்கில் பட்டு மாநிலத்து *
நானே நானாவித * நரகம் புகும் பாவம் செய்தேன் **
தேனேய் பூம்பொழில் சூழ் * திருவேங்கட மாமலை * என்
ஆனாய்! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 2

கொன்றேன் பல்லுயிரைக் * குறிக்கோள் ஒன்று இலாமையினால் *
என்றேனும் இரந்தார்க்கு * இனிதாக உரைத்து அறியேன் **
குன்றேய் மேகம் அதிர் * குளிர் மாமலை வேங்கடவா! *
அன்றே வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 3

குலம் தான் எத்தனையும் * பிறந்தே இறந்து எய்த்தொழிந்தேன் *
நலம் தான் ஒன்றுமிலேன் * நல்லதோர் அறம் செய்துமிலேன் **
நிலம் தோய் நீள்முகில் சேர் * நெறியார் திருவேங்கடவா! *
அலந்தேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 4

எப்பாவம் பலவும் * இவையே செய்து இளைத்து ஒழிந்தேன் *
துப்பா! நின்னடியே * தொடர்ந்து ஏத்தவும் கிற்கின்றிலேன் **
செப்பார் திண்வரை சூழ் * திருவேங்கட மாமலை * என்
அப்பா! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 5

மண்ணாய் நீர் எரி கால் * மஞ்சுலாவும் ஆகாசமுமாம் *
புண்ணார் ஆக்கை தன்னுள் * புலம்பித் தளர்ந்து எய்த்தொழிந்தேன் **
விண்ணார் நீள்சிகர * விரையார் திருவேங்கடவா! *
அண்ணா! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 6

தெரியேன் பாலகனாய்ப் * பல தீமைகள் செய்துமிட்டேன் *
பெரியேன் ஆயின பின் * பிறர்க்கே உழைத்து ஏழை ஆனேன் **
கரி சேர் பூம்பொழில் சூழ் * கனமாமலை வேங்கடவா! *
அரியே! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 7

நோற்றேன் பல்பிறவி * நுன்னைக் காண்பதோர் ஆசையினால் *
ஏற்றேன் இப்பிறப்பே * இடர் உற்றனன் எம்பெருமான்! **
கோல்தேன் பாய்ந்து ஒழுகும் * குளிர் சோலை சூழ் வேங்கடவா! *
ஆற்றேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 8

பற்றேல் ஒன்றுமிலேன் * பாவமே செய்து பாவி ஆனேன் *
மற்றேல் ஒன்றறியேன் * மாயனே! எங்கள் மாதவனே! **
கல்தேன் பாய்ந்து ஒழுகும் * கமலச் சுனை வேங்கடவா! *
அற்றேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 9

** கண்ணாய் ஏழுலகுக்கு * உயிராய எங்கார் வண்ணனை *
விண்ணோர் தாம் பரவும் * பொழில் வேங்கட வேதியனை **
திண்ணார் மாடங்கள் சூழ் * திருமங்கையர் கோன் கலியன் *
பண்ணார் பாடல் பத்தும் * பயில்வார்க்கு இல்லை பாவங்களே 10

**அடிவரவு:** தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரியேன் நோற்றேன் பற்றேல் கண்ணாய் கண்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---